ஊராட்சி மன்ற தலைவர், மேலப்பாளையம் ஊராட்சி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – திருமதி.வெண்ணிலா சிவக்குமார்,

நாள்:7.9.2021

பொருள்: மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம் - கரூர் வட்டம் - தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் - மேலப்பாளையம் ஊராட்சி, மேலப்பாளையம கிராமம் - சர்வே எண்:758/B1B–க்கு 0.70 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் - தொடர்பு.

பார்வை:

1.அரசானை (நிலை) எண்.71, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்.16.06.2003,

2.மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.76/2020 கமா, நாள்: 27.07.2020 மற்றும் 18.09.2020.

3.கரூர் இணை சார்பதிவகம்-1 ஆவண எண்.1667/2020. நாள்.23.09.2020.

4.மேலப்பாளையம் ஊராட்சி மன்ற தீர்மான எண்:29/20-21,நாள்: 03.09.2021

5.மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடிதம் ம.வ/மா.ந.ஊ.உ.இ(க.மா)எண்.103/2021, நாள்:20.07.2021.

உத்தரவு.

கரூர் மாவட்டம் - கரூர் வட்டம் - தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் மேலப்பாளையம் ஊராட்சி - மேலப்பாளையம் கிராமம் - புல எண். 758/B1B–ல் கட்டுப்பட்ட 0.70 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி பார்வை எண். 2-ல் காணும் விண்ணப்பத்தின்படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. மேற்படி இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து பார்வை எண்.4-ல் கண்டபடி மேலப்பாளையம் ஊராட்சி மன்ற தீர்மான எண்29/2020-2021, நாள்:03.09.2021ஆக தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பார்வை 2-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் 18.09.2020-ந் தேதிய கடிதத்தின்படி மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், உதவி இயக்குநர், கரூர் அவர்கள் கடிதம் நாள்:20.07.2021-ன் படி ம.வ/மா.ந.ஊ.உ.இ(க.மா)எண்.103/2021, என எண்ணிடப்பட்டு இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள் அமைத்தும், சாக்கடைகள் கட்டியும் அடிப்படை வசதிகளை மேற்கெண்டுள்ளார், மேலும் நிபந்தனையின் அடிப்படையில் மொத்த மனையிட பரப்புக்கு (18215.47ச.அடி) க்கு அபிவிருத்தி கட்டணமாக தொகை ரூ. 1500/-(ரூபாய் ஆயிரத்து ஐந்து நூறு மட்டும்) பல்வகை ரசிது எண். 3318 /07.09.21 படி மேலப்பாளையம் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய மனைப்பிரிவு

சாலை, பொது உபயோகம் 0.52% மற்றும் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கான 0.50% இடம் ஆகியவற்றை பார்வை 3-ல் காணும் ஆவணம் மூலம் மேலப்பாளையம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலும், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர், அவர்களது இறுதி ஒப்புதல் அடிப்படையிலும், நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் மேலப்பாளையம் கிராமம் சர்வே எண். 758/B1B-க்கு கட்டுபட்ட 0.70 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

S.Venniti

ஊராட்சி மன்ற தலைவர்,
மேலப்பாளையம் ஊராட்சி,
கரூர் மாவட்டம்.

பெறுதல்

திரு. P.முருகேசன், S/O. K.பெருமாள்,
எண்:-144/7, வடக்குபாளையம்,
S.வெள்ளாளபட்டி,
மேலப்பாளையம் கிராமம்,
கரூர் வட்டம்,
கரூர் மாவட்டம்.

நகல்.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
இனாம் கரூர், பழைய நகராட்சி கட்டிடம்,
பெரியகுளத்து பாளையம்,
கரூர் மாவட்டம்.
கரூர் மாவட்டம்-639001.